©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 8.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 1] சென்னை, புதன்கிழமை, ஜனவரி 1, 2020
மார்கழி 16, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

2019 நவம்பர் 16 அன்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது ஈங்கிதனால் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:-

**தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 07/2019.**

**1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு அவசரச் சட்டம்.**

தமிழ்நாட்டு சட்டமன்றமானது, அமர்வில் இல்லாதிருப்பதால் மற்றும் தமிழ்நாடு ஆளுநர் தற்போதுள்ள சூழ்நிலைகள் இதில் இதன்பின்பு காணப்படுகின்ற நோக்கங்களுக்காக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக அவருக்காக அவசியமானதாக இருப்பதாக அவர் மனநிறைவடைந்திருப்பதால்;

தற்போது, ஆகையால் அரசமைப்பின் 213ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆளுநர் ஈங்கிதனால் பின்வரும் அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்கிறார்:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்த அவசரச் சட்டம், 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காவது திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

53 ஆம் பிரிவிற் கானத் திருத்தம்.

2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என வழங்கப்படுவதான) 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 53–ஆம் பிரிவின்(b) -ஆம் கூறில், "ஊராட்சி ஒன்றிய குழுவின் உறுப்பினர் ஒருவராக" எனும் சொற்றொடருக்குப் பிறகு "அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்" எனும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

57–A எனும் புதிய பிரிவை புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின் 57–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும். அவையாவன:-

"**57A. தேர்தலில் வாக்களிக்கும் இயந்திரம்.**– இந்தச் சட்டத்தில் அல்லது இதனடிப்படையில் இயற்றப்பட்ட விதிகளில் கூறப்பட்டுள்ள எது எவ்வாறு இருப்பினும், வாக்களிக்கும் இயந்திரம் மூலம் வாக்குகளை அளிப்பதும் பதிவு செய்வதும் அத்தகைய சிற்றொகுதி அல்லது கிராம ஊராட்சியின் சிற்றொகுதிகள், ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சி ஆகியவற்றில் ஏற்றுக்கொள்ளப்படலாம் மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையம், அத்தகைய கிராம ஊராட்சி அல்லது கிராம ஊராட்சிகளின் தலைவர் தேர்தலுக்காக ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகள் தொடர்பானவற்றை கருத்தில் கொண்டு குறிப்பிடலாம்."

**விளக்கம்:—** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, "வாக்களிக்கும் இயந்திரம்" என்பது, மின்னணு முறையில் இயங்கும் அல்லது மற்றபடி வாக்குகளை அளிப்பதற்காக அல்லது பதிவு செய்யப்படுவதற்காகப் பயன்படுத்தப்படும் எந்த ஒரு இயந்திரம் அல்லது கருவி மற்றும் இந்தச் சட்டம் அல்லது இதன் அடிப்படையில் இயற்றப்பட்ட விதிகளில் குறிப்பிடப்பட்ட ஒரு வாக்குப்பெட்டி அல்லது வாக்குச்சீட்டு குறித்த குறிப்பு ஏதேனும், எந்தவொரு தேர்தலிலும் அத்தகைய வாக்குப்பதிவு இயந்திரம் எங்கு பயன்படுத்தப்பட்டாலும் அத்தகைய வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பற்றிய குறிப்பை உள்ளடக்கியதாகக் கருதப்படும்".

**விளக்கவுரை**

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது, நகர பஞ்சாயத்து, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களில் உள்ள விதிகளின் அடிப்படையில் உள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் மின்னணு வாக்களிக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு வசதியாக, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 21/1994) பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்ய பரிந்துரை செய்துள்ளது.

2. மேலும் கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 21/1994–இல் ஊராட்சி ஒன்றிய அல்லது மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவரின் பதவியை துறப்பதற்காக ஊராட்சி ஒன்றிய அல்லது மாவட்ட ஊராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், நேர்விற்கேற்ப, எந்தவொரு வழக்கமான காலியிடத்திலும், கூறப்பட்ட ஆணையமானது, கூறப்பட்ட நோக்கத்திற்காக கூறப்பட்ட சட்டத்தின் 53–ஆம் பிரிவினைத் திருத்துவதற்காக பரிந்துரை செய்துள்ளது.

3. அரசானது விழிப்புடன் பரிசீலனை செய்த பிறகு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் மேற்சொன்ன ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வதெனவும், கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 21/1994–ஐ தக்கவாறு திருத்தம்செய்வதெனவும் முடிவு செய்துள்ளது.

4. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிக்குமார்,**
*அரசுச் செயலாளர் (மு.கூ.பொ),*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**க.நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

2019, நவம்பர் 19 அன்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது ஈங்கிதனால் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:—

**தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 8/2019.**

**தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு அவசரச் சட்டம்.**

மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும். இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தான் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்;

எனவே, அரசமைப்புச் சட்டத்நின், 213ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கிறார்:—

பகுதி-I.

**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்த அவசரச் சட்டம், 2019ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2). இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பகுதி-II

**1919-ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சி சட்டத்திற்கானத் திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919

28ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**2.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1919ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1919ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சிச் சட்டத்தின் 28ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்; அதாவது:—

''28, **மேயருக்கான தேர்தல்.—** (1) மாமன்றமானது மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் அத்தகைய மேயராகத் தொடருவார், வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப்போகாது.

(3) மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டும் மற்றும் அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயாராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும் மற்றும் அவர் எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ, அந்நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதிப் பெற்றிருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே அவர் பதவி வகித்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதியற்றவாரக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவிக்காலம் முடிவுறுவதன் பேரில் அல்லது பிறவாராக மேயராகத் தாம் இருப்பது அற்றுப்போவதன் பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.".

44–AC ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**3. 1919** ஆம் ஆண்டு சட்டத்தின் **44–AC** ஆம் பிரிவில்,–

**(1)** ஓரத் தலைப்பில் , "துணை மேயர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணைமேயர்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**(2) (1)**ஆம் உட்பிரிவில், "துணை மேயர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணைமேயர்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**(3) (12)**ஆம் உட்பிரிவில், "துணை மேயர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மேயர் அல்லது துணைமேயர் நேர்விற்கேற்ப" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**(4) (13)**ஆம் உட்பிரிவில், "துணை மேயர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மேயர் அல்லது துணைமேயர்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**(5) (14)**ஆம் உட்பிரிவில், ''துணை மேயர் ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மேயர் ஒருவர் அல்லது துணைமேயர் ஒருவர்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

மனநலம் பாதிக்கப்பட்டவராகுதல்:".

**4. 1919** ஆம் ஆண்டு சட்டத்தின் **53** ஆம் பிரிவில், **(1)** ஆம் உட்பிரிவில். ''(a) மனநலம் பாதிக்கப்பட்டவராகுதல்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக பின்வரும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 53 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**5. 1919**ஆம் ஆண்டு சட்டத்தின் **59**ஆம் பிரிவில், **(2)**ஆம் உட்பிரிவில், ''(c) கூறில், "மாமன்ற உறுப்பினர் அல்லது மேயர் என்ற சொற்றொடருக்குப் பதிலாக பின்வரும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 59 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்

## பகுதி III

## 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

**6.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் **1920**ஆம் ஆண்டுச் சட்டம் சட்டம் எனக் குறிப்பிடுவதான) **1920**ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் **3-T** ஆம் பிரிவில். **(1)** ஆம் உட்பிரிவில். ''(அதன் தலைவரைத் தவிர)'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும், 3-T ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**7. 1920** ஆம் ஆண்டுச் சட்டத்தின் **7**ஆம் பிரிவில், **(1)** ஆம் உட்பிரிவில், ''(அதன் தலைவரைத் தவிர)'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 7- ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**8. 1920** ஆம் ஆண்டுச் சட்டத்தின் **7-A** ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், 7-A ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

அதாவது;–

''7-A. **தலைவருக்கான தேர்தல். (1)** மன்றமானது மன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்தில் மன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**(2)** தலைவர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் அத்தகைய தலைவாரகத் தொடருவார், வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகாது.

(3) தலைவர் பதிவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாக பதவியேற்றல் வேண்டும் மற்றும் அவர் எவருடைய காளியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ, அந்நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால், எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதிப் பெற்றிருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே அவர் பதவி வகித்தல் வேண்டும்.

(4) தலைவர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதிற்றவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவிக்காலம் முடிவுறுவதன் பேரில் அல்லது பிறவாராகத் தலைவராகத் தாம் இருப்பது அற்றுப்போவதன் பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.".

9. 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 8 ஆம் பிரிவில், – 8 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்கள்" என்ற சொற்றொடாரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், ‘‘தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்கள்" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2) ஆம் உட்பிரிவில், ‘‘தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்கள்" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (2–A) எனும் உட்பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (3) ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவர்’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) (4) ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

7 (5) ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்" மற்றும் ‘‘தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, முறையே ‘‘மன்ற உறுப்பினர் ஒருவர்’’ மற்றும் ‘‘மன்ற உறுப்பினர்’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

10, 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 9 ஆம் பிரிவில்,– 9 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், ‘‘தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்’’ என்ற சொற்றெரடருக்குப் பதிலாக ‘‘மன்ற உறுப்பினர்’’ என்ம சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)ஆம் உட்பிரிவில், ‘‘தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (3)ஆம் உட்பிரிவில்; "(1) ஆம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஒருவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘(1) ஆம் உட்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர் ஒருவர்’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11.** 1920ஆம் ஆண்டு சட்டத்தின் 12ஆம் பிரிவில் (4) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

12–A ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

**12.** 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 12-A ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவுமாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''12-A தலைவர் அல்லது துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படாதபோது நடைமுறை.– 7-A ஆம் பிரிவின் கீழ் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் நடத்தப்படும் தேர்தைல் தலைவர் அல்லது நேர்விற்கேற்ப துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையெனில் ஒரு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.".

14 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

**13.** 1920ஆம் ஆண்டு சட்டத்தின் 14ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்; அதாவது;–

''**14.** தலைவர் மன்றத்தின் ஒவ்வொரு குழுவிலும் உறுப்பினராயிருத்தல்.– தலைவர் தனது பதவியின் காரணமாக மன்றத்தின் ஒவ்வொரு குழுவின் உறுப்பினராவார்."

30 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**14.** 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 30 ஆம் பிரிவில்.–

(1) ஓரத்தலைப்பில், ''தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில். "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

40 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்

**15.** 1920ஆம் ஆண்டு சட்டத்தின் 40 ஆம் பிரிவில், ஓரத்தலைப்பு உட்பட, ''துணைத் தலைவர்'' என்ற சொற்றொடர் வருகின்ற இடங்களிலெல்லாம் ''தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

40–A ஆம் பிரிவிற்கானத்

**16.** 1920ஆம் ஆண்டு சட்டத்தின் 40–A ஆம் பிரிவில்,.

(1) ஓரத் தலைப்பில், "துணைத் தலைவர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)ஆம் உட்பிரிவில். "துணைத் தலைவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்

(3) (12)ஆம் உட்பிரிவில்; ''துணைத் தலைவர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''தலைவர் அல்லது துணைத் தலைவர்; நேர்விற்கேற்ப'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13)ஆம் உட்பிரிவில். ''துணைத் தலைவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (14)ஆம் உட்பிரிவில் "துணைத் தலைவர் ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''தலைவர் ஒருவர் அல்லது துணைத் தலைவர் ஒருவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

40–B ஆம் பிரிவினை விட்டுவிடுதல்.

**17.** 1920ஆம் ஆண்டு சட்டத்தின் 40-B–ஆம் பிரிவினை விட்டுவிடப்படுதல் வேண்டும்.

43-C ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**18.** 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 43-C–ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில்,–

(1) ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்கள்'' என்ற சொற்றொடாரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**19. 1920–**ஆம் ஆண்டு சட்டத்தின் **48**ஆம் பிரிவில். இரு இடங்களில் வருகின்ற ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவராக'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்: 48 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்

**20, 1920–**ஆம் ஆண்டு சட்டத்தின் **49–**ஆம் பிரிவில்,– 49 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில், ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில்,–

(a) தொடக்கப் பகுதியில், ''தலைவர் ஒருவாரக அல்லது மன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவராக'' என்ற சொற்றொடாரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (e) கூறில், இரு இடங்களில் வருகின்ற ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**21. 1920–**ஆம் ஆண்டு சட்டத்தின் **50–**ஆம் பிரிவில்,– 50 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்கள்" எனற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்,

(2) (1) ஆம் உட்பிரிவில்,–

(a) தொடக்கப்பகுதியில் ''தலைவர் அலலது மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (f) கூறில்,– ''தலைவரின் அல்லது பிற மன்ற உறுப்பினர் எவரின்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக பிற மன்ற உறுப்பினஎ எவரின்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (i) கூறில்,–

(i) ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்'' ரன்ற சொற்றொடாரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) வரம்புரையில், ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (4) ஆம் உட்பிரிவில்;–

(a) ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடாரனது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

51 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**22. 1920–**ஆம் ஆண்டு சட்டத்தில் **51–**ஆம் பிரிவில்,–

**1.** ஓரத்தலைப்பில், ''தலைவா அல்லது மன்ற உறுப்பானர் என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**2. (1)**ஆம் உட்பிரிவில், ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்'', ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் எவரும் ''மற்றும் ''அத்தகைய தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' என்ற செற்றொடர்களுக்குப் பதிலாக முறையே ''மன்ற உறுப்பினர் ஒருவர்'', மன்ற உறுப்பினர் எவரும்'' மற்றும் ''அத்தகைய மன்ற உறுப்பினர்'' என்ற சொறொடர்களானது அமைக்கப்படுதல் வேண்டும்;

**3 (3)** ஆம் உட்பிரிவில். ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

368 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**23. 1920–**ஆம் ஆண்டு சட்டத்தின் **368–**ஆம் பிரிவில்,–

**(2) (5)** ஆம் உட்பிரிவில். ''தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்கள்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**(3) (6)**ஆம் உட்பிரிவில். ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர்கள்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி **IV.**

## 1971–ஆம் ஆண்டு மதுரை நகரமாநகராட்சி சட்டத்திற்கானத் திருத்தம்.

29 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**24** (இதன் பின்பு இந்தப் பகுதியில் **1971** ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான) **1971** ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்தின் **29**ஆம் பிரிபிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்: அதாவது:– தமிழ்நாடு சட்டம் 15/1971,

''**29. மேயருக்கான தேர்தல்.– (1)** மாமன்றமானது, மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**(2)** மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் அத்தகைய மேயாரகத் தொடருவார், வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகாது.

(3) மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர்; உடனடியாச பதவியேற்றல் வேண்டும் மற்றும் அவர், எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ; அந்நபர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதிப் பெற்றிருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே அவர் பதவி வகித்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதியற்றவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவிக்காலம் முடிவுறுவதன் பேரில் அல்லது பிறவாராக மேயராக தரம் இருப்பது அற்றுப்போவதன் பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்."

25–1971 ஆம் ஆண்டு சட்டத்தின் 48–AB ஆம் பிரிவில்,– 48-AB ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில்; ''துணை மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மேயர் அல்லது துணை மேயர்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''(1) ஆம் உட்பிரிவில், ''துணை மேயர் என்ற சொற்றொடருக்குப் பதிலாக மேயர் அல்லது துணை மேயர்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (12) ஆம் உட்பிரிவில். ''துணை மேயர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர், நேர்விற்கேற்ப" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13) ஆம் உட்பிரிவில், ''துணை மேயர் என்ற சொற்றொடருக்குப் பதிலாக "மேயர் அல்லது துணை மேயர், என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்,

(5) (14) ஆம் உட்பிரிவில் ''துணை மேயர் ஒருவர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் ஒருவர் அல்லது துணைமேயலி ஒருவர்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**26.** 1971 ஆம் ஆண்டு சட்டத்தின் 66 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் (b) கூறில் ''மாமன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக 'மாமன்ற உறுப்பினர் என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 66 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

## பகுதி V.

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்ட எண்25/1981.

**27.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981 ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 29 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

''**29. மேயருக்கான தேர்தல்: (1)** மாமன்றமானது; மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்,

(2) மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அத்தகைய மேயராகத் தொடருவார். வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப்போகாது.

(3) மேயர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடம் எதுவும் புதிய தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு ஏற்பட்ட காலியிடம் எதிலும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர். உடனடியாகப் பதவியேற்றல் வேண்டும் மற்றும் அவர்: எவருடைய காலியிடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ அந்நபர் அக்காவியிடம் ஏற்படாதிருந்தால் எவ்வளவு காலம் வரை பதவியில் இருப்பதற்கு உரிமைத் தகுதி, பெற்றிருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும் மட்டுமே அவர் பதவி வகித்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதியற்றவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவாது பதவிக்காலம் முடிவறுவதன் பேரில் அல்லது பிறவாராக மேயராக தாம் இருப்பது அற்றுப்போவதன் பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவார்.".

50-C ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**28.** 1981 ஆம் ஆண்டு சட்டத்தின் 50–C ஆம் பிரிவில்,–

(1) ஓரத்தலைப்பில் ''துணை மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாச ''மேயர் அல்லது துணைமேயர்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1)ஆம் உட்பிரிவில், ''துணை மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணைமேயர்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்,

(3) (12) ஆம் உட்பிரிவில்; "துணை மேயர்" என்ற சொற்றொருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை ''மேயர், நேர்விற்கேற்ப'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13) ஆம் உட்பிரிவில். ''துணை மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணைமேயர்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (14) ஆம் உட்பிரிவில் "துணை மேயர் ஒருவர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் ஒருவர் அல்லது துணை மேயர் ஒருவர்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

68 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**29.** 1981 ஆம் ஆண்டு சட்டத்தின் 68 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் (b) கூறில் ''மாமன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மாமன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**விளக்கவுரை**

மாநகராட்சிகளின் மேயர் மற்றும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்காக கட்சியின்அடிப்படையில் தேர்தல்கள் நேரடியாக நடத்தப்படுகின்றன. கட்சியின் அடிப்படையில் அல்லாமல் நேரடியாக தேர்தல்கள் நடைபெறும் கிராம ஊராட்சிகளைத் தவிர மற்ற அடுக்குகளில் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் போன்றவற்றில் கட்சியின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன மற்றும் மன்ற உறுப்பினர்கள். அவர்களுக்குள் ஒருவரை தலைவராக தேர்ந்தெடுக்கும் போது அமைப்பின் தலைவர் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**2.** மேயர் / தலைவர் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் பெரும்பான்மையான மன்ற தலைவர்கள் இதர அரசியல் கட்சி/கட்சிகளைச் சார்ந்தவர்களாகவும் இருக்கும்போது அவர்கள் மன்ற உறுப்பினர்களிடமிருந்து மிகுந்த ஒத்துழைப்பைப் பெறத் தவறிவிடுகிறார்கள். இதன் விளைவாக மோதல்களும் மன்றத்தின் சுமூகமான செயல்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன. சில நேரங்களில் மன்றக் கூட்டங்களை முறையான இடைவெளியில் கூட்டுவது கூட இதுபோன்ற சூழ்நிலைகளில் கடினமாகிவிடும். தவிர. பொதுமக்களுக்கு சேவை செய்வதற்கான மிக அடிப்படை நோக்கமானது ஒரு கடுமையான இடைத்தங்களுக்கு உட்படுகிறது. அத்தகைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கற்பனைசெய்ய முடியாத அளவிற்கு செயல்படுவது பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறது.

**3.** மேயர்/தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு மறைமுகத் தேர்தல் நடத்தப்பட்டால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களிடையே நிலைத்தன்மை மற்றும் கூட்டுப்பொறுப்பு இருக்கும் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளும் இணக்கமான மற்றும் உள் உணர்வுடன் செயல்பட முடியும் என்றும் கருதப்படுகிறது. மாநகராட்சி ஒரு பெரிய நகர்ப்புறமாக இருப்பதால், மாமன்றங்களில் அலுவல் நடவடிக்கையின் அளவானது பெரிய அளவில் உள்ளது. உதாரணமாக; சென்னை நகர மாநகராட்சி மன்றம் 200 மன்ற உறுப்பினர்களையும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகர மாநகராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் 100 மன்ற உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், மன்றக் கூட்டத்தில் சுமூகமான அலுவல் நடவடிக்கையை மேற்சொன்ன பெரும்பான்மையான மன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். எனவே, முடிவெடுப்பதில் பெரும்பான்மையான மன்ற உறுப்பினர்களின் ஆதரவை உறுதி செய்வதற்கும், பயனுள்ள அடிப்படை குடிமை பணிகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கும், உள்ளாட்சி அமைப்புகளின் மேயர் மற்றும் நகர்புறத் தலைவரின் அலுவலகங்களுக்கு மறைமுகத் தேர்தல் முறைக்குத் திரும்புவது பொருத்தமானதாக கருதப்படுகிறது.

**4.** மேலும், மாநகராட்சிகளின் மேயர் மற்றும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர் ஆகியோர்களுக்கான மறைமுகத் தேர்தலானது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில்நிர்வாகத்தின் சுமூகமான செயல்பாட்டிற்கு ஒரு சிறந்த அமைப்பாக இருக்கும் என்று பல்வேறு மன்றங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளன.

**5.** எனவே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சிறந்த பொறுப்புடைமை மற்றும் கூட்டுப் பொறுப்பு போன்ற நன்மைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதோடும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுமூகமான செயல்பாட்டின் நலனுக்காகவும், மாநகராட்சிகளின் மேயர் மற்றும் நகராட்சிகள், பேரூராட்சிகளின் தலைவர்களுக்கு மறைமுக தேர்தலை நடத்துவதற்காக மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் தொடர்பான சட்டங்களைத் திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிக்குமார்,**
*அரசுச் செயலாளர் (மு.கூ.பொ.),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

2019, நவம்பர் 27 அன்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது ஈங்கிதனால் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:-

**தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 9/2019.**

1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு அவசரச் சட்டம்.

தமிழ்நாடு சட்டமன்றமானது அமர்வில் இல்லாதிருப்பதால் மற்றும் தமிழ்நாடு ஆளுநர் தற்போதுள்ள சூழ்நிலைகள் இதில் இதன்பின்பு காணப்படுகின்ற நோக்கங்களுக்காக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக அவருக்காக அவசியமானதாக இருப்பதாக அவர் மனநிறைவடைந்திருப்பதால்,;

தற்போது, ஆகையால் அரசமைப்பின் 213–ஆம் உறுப்பின் (1) ஆம் கூறால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆளுநர் ஈங்கிதனால் பின்வரும் அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்கிறார்:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்த அவசரச் சட்டம், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

33–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. 1987 ஆம் ஆண்டுதமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில் ‘‘எட்டு வருடங்கள் மற்றும் ஆறு மாதங்கள்’’ எனும் சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஒன்பது வருடங்கள்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**விளக்கவுரை**

**1987** ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **27/1989**) **33** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவானது, ஒரு புதிய சந்தைக்குழு அமைக்கப்படும் வரையில் மொத்தத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு புதிய சந்தைக் குழுவினை அமைப்பது நிலுவையில் இருக்கும் போது சந்தைக்குழுவின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு தனி அலுவலர் ஒருவரை பணியமர்த்தம் செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. மேற்சொன்ன வகைமுறையின் விளைவாக, மேற்சொன்ன சந்தைக்குழுக்களின் அலுவற்பணிகளை மேலாண்மை செய்வதற்கு தனி அலுவலர்கள் பணியமர்த்தம் செய்யப்பபட்டனர். மற்றும் தனி அலுவலர்களின் பதவிக்காலம் அவ்வப்பொழுது மேற்சொன்ன **33** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையை திருத்தம் செய்வதன் மூலம் மேற்சொன்ன மூன்று ஆண்டுகள் காலத்திற்கு மேல் நீட்டிக்கப்பட்டது. இறுதியாக தமிழ்நாடு சட்டம் **2/2019** –ஆல் அவர்களுகடைய பதவிக்காலம் எட்டு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்பட்டது. தனி அலுவலர்களின் பதவிக்காலம் **2019**–ஆம் ஆண்டு நவம்பர் **29**–ஆம் தேதியுடன் முடிவடைவதன் பொருட்டு சந்தைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாக இருப்பதால் மேற்சொன்ன தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை **29–11–2019**–க்கு பிறகு மேலுமான ஆறு மாதங்கள் காலத்திற்கு நீட்டிப்பதென்பது கட்டாயத் தேவையாக இருந்ததாலும் அல்லது சந்தைக் குழுக்களை மறுசீரமைக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை பணியமர்த்தம் செய்வதற்கு அதன் காரணமாக மேற்சொன்ன நோக்கத்திற்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் **27/1989** ஐ திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** இந்த அவசரச் சட்டமானது மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிக்குமார்,**
*அரசுச் செயலாளர் (மு.கூ.பொ),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் பின்வரும் சட்டமானது, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2 ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத்தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:

**சட்ட எண். 38/2019**

**1978–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் மற்றும் 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம் இவற்றிற்கான செயல்முறைகளை உயிர்ப்பித்தல் செய்வதற்குமானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1 (1) இந்தச் சட்டம் 2019–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டம் என்று வழங்கப் பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பகுதி I

தமிழ்நாடு சட்டம் 31/1978

2 (1) 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (இதற்குப் பிறகு 1978–ஆம் ஆண்டு சட்டம் என்று குறிக்கப்படும்) சரியீட்டைத் தீர்மானிப்பது தொடர்பான வகைமுறைகள் தவிர்த்து மற்ற வகைமுறைகள் 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் நாளன்று மற்றும் அன்றைய நாளிலிருந்து உயிர்ப்பித்தல் பெற்றதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 31/1978–இன் செயல் முறைகளை உயிர்ப்பித்தல்.

(2) 1978–ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ்வெளியிடப்பட்ட அனைத்து விதிகள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், ஆணைகள், அல்லது இச்சட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட அனைத்து நோக்கத்திற்கான எந்த ஒரு செயல்முறைகளும் 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் நாளுக்கு முன்னதாக உடனடியாக செல்லாற்றல் பெற்று சரியீடு தொடர்பாக முடிவு செய்வதைத் தவிர்த்து 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் தேதியன்று மற்றும் அன்றைய தேதியிலிருந்து உயிர்ப்பித்தல் பெற்றதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் 30/2013.

(3) 2013–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி சரியீட்டைத் தீர்மானிப்பது, இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி மறுவாழ்வளிப்பது மற்றும் மறுகுடியமர்வைத் தீர்மானிப்பது மற்றும் மூன்றாவது இணைப்புப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை 1978–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் செயல் முறைகளுக்கும் பொருந்துவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் 30/2013 பொருந்தாமை

**3.** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு தவிர, **2013—**ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பிற்கும் மற்றும் மறு குடியமர்விற்கான உரிமைச் சட்டமானது, **1978—**ஆம் ஆண்டு சட்டத்தின் **4—**ஆம் பிரிவின் **1—**ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக தேவைப்படும் எந்த நிலத்தையும் எடுக்க பொருந்தாது மற்றும் **1978—**ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மட்டுமே அரசானது எந்த ஒரு நிலத்தையும் கையகப்படுத்துதல் பொருந்தும். மையச் சட்டம் 30/2013.

1978—ஆம் ஆண்டு சட்டத்தின் 20—ஆம் பிரிவை விட்டுவிடுதல்.

**4. 1978—**ஆம் ஆண்டு சட்டத்தின் **20—**ஆம் பிரிவை விட்டுவிடுதல் வேண்டும்.

செல்லத்தக்கதாக்குதல்

**5.** தீர்ப்புரையில், தீர்ப்புக்கட்டளையில் அல்லது நீதிமன்றத்தின் ஆணையில், **1978—**ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் எதிலும் எது எவ்வாறு இருப்பினும் சரியீட்டைத் தீர்மானிப்பது தொடர்பானவைத் தவிர்த்து **2013—**ஆம் ஆண்டு செப்டம்பர் **26—**ஆம் நாளன்று தொடங்கி இந்தச் சட்டத்தை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட தேதி அன்று முடிவடைகின்ற காலம் வரை அனைத்து உரிய நேரங்களில் நடைமுறைக்கு வந்துவிட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் **1978—**ஆம் ஆண்டு சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் **1978—**ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

## பகுதி II

தமிழ்நாடு சட்டம் 10/1999—இன் உயிர்ப்பித்தல் செயல்முறை

6. (1) சரியீட்டைத் தீர்மானிப்பது தொடர்பான வகைமுறைகளைத் தவிர்த்து **1997—**ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தில் (இதற்குப்பின்னர் **1999—**ஆம் சட்டம் என்று குறிப்பிடப்படும்) அனைத்து வகைமுறைகளும் **2013—**ஆம் ஆண்டு செப்டம்பர் **26—**ஆம் நாளில் மற்றும் அன்றைய தினத்திலிருந்து உயிர்ப்பித்தல் பெற்றதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 10/1999.

(2) **1999—**ஆம் ஆண்டு சட்டத்தின் கீழான அனைத்து விதிகள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், ஆணைகள், பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகள் அல்லது இச்சட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட எந்த ஒரு செயல்முறையும் சரியீட்டைத் தீர்மானிப்பது தொடர்பானவைத் தவிர்த்து **2013—**ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **26—**ஆம் நாளுக்கு முன்னதாக உடனடியாக செல்லாற்றல் பெற்று அனைத்து நோக்கத்திற்காகவும் எந்த ஒரு செயல்முறைகளும் **2013—**ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **26—**ஆம் நாளில் மற்றும் அன்றைய நாளிலிருந்து உயிர்பித்தல் பெற்றதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) 2013—ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலின் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் முதலாம் இணைப்பு பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி சரியீட்டைத் தீர்மானிப்பது, இரண்டாம் இணைப்பு பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி மறுவாழ்வளிப்பது மற்றும் மறு குடியமர்வைத் தீர்மானிப்பது மற்றும் மூன்றாவது இணைப்பு பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை **1999—**ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் செயல்முறைகளுக்கும் பொருந்துவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மையச் சட்டம் 30/2013

மையச் சட்டம் 30/2013

**7.** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு தவிர, **2013** ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம், **1999** ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு **3** உட்பிரிவு-**(1)**ல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக தேவைப்படும் எந்தவொரு நிலமும் **1999** ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகளின்படி அரசாங்கத்தால் நிலம் கையகப்படுத்துதலுக்கு பொருந்தாது மற்றும் அத்தகைய நிலத்தை அரசானது **1999** ஆம் ஆண்டு சட்டத்தின் வகை முறைகளுக்கு இணங்கியவாறு கையகப்படுத்துதல் வேண்டும். மையச்சட்டம் 30/2013 பொருந்தாது.

மையச் சட்டம் 30/2013 பொருந்தாது

**8.** **1999** ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு **21–**ஐ விட்டுவிடுதல் வேண்டும். 1999 ஆம் ஆண்டு சட்டத்தில் பிரிவு 21–ஐ விட்டுவிடுதல்.

**9.** **1999** ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளின் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது உத்தரவு ஆகியவற்றில் கூறப்பட்ட எது எவ்வாறு இருப்பினும், இழப்பீட்டை நிர்ணயிப்பது தொடர்பான விதிகள் தவிர **2013** ஆம் ஆண்டு செப்டம்பர் **26** ஆம் நாள் தொடங்கும் காலகட்டத்தில் அனைத்து உரிய காலங்களிலும் நடைமுறையில் இருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியுடன் முடிவடைகிறது மற்றும் **1999** ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட அல்லது செல்லத்தக்கதாக முடிக்கப்பட்டது எதுவும் சரியீடு பெறுவது தொடர்பானது குறித்து முடிவு செய்கிறது.

## பகுதி-III

தமிழ்நாடு சட்டம் 34/2002

10. **(1)** சரியீட்டை நிர்ணயம் செய்தல் தொடர்பான வகைமுறைகள் தவிர (இதன்பின்பு **2002** ஆம் ஆண்டு சட்டம் என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு வகைமுறைகளும் **2013** ஆம் ஆண்டு செப்டம்பர் **26** ஆம் தேதி அன்று மற்றும் அதிலிருந்து அதன் விளைவுகளுடன் உயிர்பித்தல் செய்தல் வேண்டும். 34/2002இன் உயர்ப்பித்தல் செயல்முறை.

**(2)** சரியீட்டை நிர்ணம் செய்தல் தொடர்பான விதிகள் தவிர அனைத்து விதிகள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், ஆணைகள், பணிப்புரைகள் **2002** ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளன, அவை **2013** ஆம் ஆண்டு செப்டம்பர் **26** ஆம் தேதிக்கு முன்னதாகவே நடைமுறையில் இருந்தன. அனைத்து நோக்கங்களுக்காகவும் **2013** ஆம் ஆண்டு செப்டம்பர் **26** ஆம் தேதி முதல் புத்தாக்கம் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் 30/2013

**(3)** முதல் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சரியீட்டை தீர்மானித்தல் மற்றும் இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வு மற்றும் மூன்றாவது இணைப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உள்கட்டமைப்பு வசதிகள் நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான **2013** ஆம் ஆண்டு சட்டம் நிலம் கையகப்படுத்துதல் **2002** ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் வரும் நடவடிக்கைகளுக்கும் பொருந்தும்.

மையச் சட்டம் 30/2013

**11.** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறின்றி **2013** ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம், **2002** ஆம் ஆண்டு சட்டம் பிரிவு **15** உட்பிரிவு **(1)–**ல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக தேவைப்படும் எந்தவொரு நிலத்திற்கும் பொருந்தாது மற்றும் அத்தகைய எந்தவொரு நிலமும் **2002** ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைக்கு இணங்கியவாறு அரசாங்கத்தால் நிலம் கையகப்படுத்துதலிற்குப் பொருந்தும். மையச் சட்டம் 30/2013 பொருந்தாது.

2002 ஆம் ஆண்டு சட்டம் பிரிவு 68 விட்டு விடப்பட்டது.

**12. 2002** ஆம் ஆண்டு சட்டம் பிரிவு **68–**ஐ விட்டுவிடுதல் வேண்டும்**.**

செல்லத்தக்க தாக்குதல்.

**13.** நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் அல்லது கட்டளைகள் **2002** ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் எதிலும் எது எவ்வாறு இருப்பினும் சரியீட்டை தீர்மானிப்பது தொடர்பான வகை முறைகளைத் தவிர்த்து **2013** ஆம் ஆண்டு செப்டம்பர் **26** ஆம் நாளன்று தொடங்குகின்ற காலத்தில் மற்றும் இந்த சட்டத்தை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்பட்ட தேதியுடன் முடிவடைகின்ற காலத்தின் போது அனைத்து உரிய நோங்களில் நடைமுறைக்கு வந்துவிட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் **2002** ஆம் ஆண்டு சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் **2002** ஆம் சட்டத்தின் கீழ் செல்லும் தன்மையுடன் செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்**.**

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிக்குமார்,**
*அரசுச் செயலாளர் (மு.கூ.பொ),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை,*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.